உ

சிவமயம்.

சிவவாக்கியம்.

இஃது

ப. முஹியித்தீன் பிச்சை சாய்பு

அவர்கள் விருப்பத்தின்படி

சென்னை - ஆனை,

பி. வே. நமசிவாயமுதலியாரவர்களது

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

இதன்விலை] [அணா. 1

Siva Vakyam
6089
AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உ

சிவமயம்.

சிவவாக்கியம்.

அகாரகாரணத்துளே யனேகனேகரூபமாய்
உகாரகாரணத்துளே வுருதரித்துநின்றனன்
மகாரகாரணத்துளே மயங்குகின்றவையகம்
சிகாரகாரணத்துளே தெளிந்ததுசிவாயமே.

அரியதோர்நமசிவாய மாதியந்தமானதும்
ஆயிரண்டுநூறுகோடி யளவிடாதமந்திரம்
தெரியநாலுவேதமாறு சாஸ்திரபுராணமுந்
தேடுமாலுமயனுஞ்சர்வ தேவதேவதேவனே.

நமசிவாயமைந்தெழுத்து நிற்குநன்னிலைகளும்
நமசிவாயமைந்தனோடு கூடுமவ்வெழுத்தையும்
நமசிவாயமைந்தெழுந்த நாதமானவற்றையும்
நமசிவாயவுண்மையை நமக்குரைசெய்நாதனே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நவ்விரண்டுகாலையாய் நவின்றமவ்வுயிரதாய்
சிவ்விரண்டுதோளதாய்ச் சிறந்தவவ்வுவாயதாம்
அவ்விரண்டுகண்ணதா யமர்ந்திருந்தகாரணஞ்
செவ்வியொத்துநின்றதே சிவாயமைந்தெழுத்துமே. 4

சிவாயமைந்தெழுத்திலே தெளிந்துமுத்திசேரலாம்
சிவாயமைந்தெழுத்திலே தெளிந்துவானமாளலாம்
சிவாயமைந்தெழுத்திலே தெளிந்துஞானம்சேரலாம்
சிவாயமைந்தெழுத்தையுந் தெளிந்துபாருமும்முளே 5

பாருனக்கென்னவேறு பயமுமில்லைபாரையா
காருனக்குத்திக்குமுங் குவுத்திடக்கடமையைப்
சிரமுருகியமுதளித்த சீருலவுநாதனே
யுரமெனக்களித்த யுண்மையுண்மையுண்மையே 6

அஞ்சுமூன்றுமெட்டதா யணுகியாணமந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டு நூறுநூறுசெப்பிரேற்
பஞ்சமாபாதகங்க ணூறுகோடிசெய்யினும்
பஞ்சுபோற்பறக்குமென்று நான்மறைகள் பண்ணுமே.

சிவாயமென்றவட்சரஞ் சிவனிருக்குமட்சரம்
உபாயமென்றுநம்புவோருக் குண்மையானவட்சரங்
கபாடமானவாசலைக் கடந்துபோகும்வாயுவை
யுபாயமிட்டழைக்குமே சிவாயமைந்தெழுத்துமே. 8

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நல்லமஞ்சனங்கள்தேடி நாடியோடிமாய்கிறீர்
நல்லமஞ்சனங்களுண்டு நாட்டமாகவுமுண்டு
யெல்லைகண்டெடுத்தநீவி ரேகபூசைசெய்கிறீர்
றில்லைமேவுசீவனுஞ் சிவன்பரத்திலாருமே. 9

அறிவிலேபிறந்திருந்த மாகமங்களோதுவீர்
நெறியிலேநீரிருக்க நேர்மையென்னநேர்மைகா
ணுறியிலேதயிரிருக்க வூர்புகுந்துவெண்ணெய்தே
டறிவிலாதமாந்தரோடு மணுகிவாழ்வதெங்ஙனே. 10

இருக்குநாலுவேதமு மெழுத்தறவேயோதினும்
பெருக்கநீறுபூசினும் பிதற்றினும்பிரானிரா
னுருக்கிநெஞ்சையுட்கலந்த வுண்மைகூடவல்லிரேற்
கருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே. 11

மூலவட்டமீதிலே முளைத்தவைந்தெழுத்திலே
காலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றதீ
ஞாலவட்டமன்றுளே நவின்றஞானிமேலதா
யேலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. 12

அம்பலத்தையம்புகொண் டசங்கென்றாலசங்குமோ
கம்பமற்றபாற்கடல் கலங்கென்றால்கலங்குமோ
வின்பமற்றயோகியை யிருளுவந்தணுகுமோ
செம்பொனம்பலத்திலே தெளிந்ததேசிவாயமே. 13

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கானமற்றகாட்டகத்தில் வெந்தெழுந்தநீறுபோல்
ஞானமற்றநெஞ்சகத்தி னல்லதொன்றுமில்லையே
யூனமற்றசோதியோ டுணர்வுகொண்டபங்கினாற்
றேனகத்தினூறல்போற் றெளிந்ததுசிவாயமே. 14

மனத்தகத்தழுக்கறாத மௌனயோகிஞானிகள்
வனத்தகத்திருக்கினு மனத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்த மௌனயோகிஞானிகண்
முலைத்தடத்திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே. 15

பேசுவானுமீசனே பிரமஞானமும்முளே
யாசையானவைவரு மலைந்தலைச்சல்படுகிறா
ராசையானவைவரை யடக்கியோரிடத்திலே
பேசிடாதிருப்பிராகி லீசன்வந்துபேசுமே. 16

சாமநாலுவேதமுஞ் சகலசாஸ்திரங்களுஞ்
சேமநாலுயோதினுஞ் சிவனைநீரறிகிலீர்
காமநோயைவிட்டுநீர் கருத்தொடுங்கவல்லீரே
லூனமற்றகாயமா யிருப்பனெங்களீசனே. 17

வடிவுகண்டுகொண்டபெண்ணை மற்றொருவர்நத்தினல்
விடுவனென்பாருயிரை வெட்டவேண்டுமென்பரே
நடுவனந்தழைத்தபோது நாறுமிந்தநல்லுடல்
சுடலைமட்டுங்கொண்டுபோய் தோட்டிகைகொடுப்பரே

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இரண்டதொன்றுமூலமா யிரச்சங்கத்துக்குளே
சுருண்டுமூலவளையமாய்ச் சுணங்குபோறகிடந்ததில்
முரண்டெழுந்தசங்கினோசை மூலநாடியூடுபோ
யரங்கபட்டணத்துளே யமர்ந்ததீதசிவாயமே. 19

வித்திலாதசம்பிரதாய மேலுமில்லைகீழுமில்லை
தச்சிலாதமாளிகை சமைந்தவாறதெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமைகொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோதுதான் சீவனில்லையில்லையே. 20

ஆடுகாட்டிவேங்கையை யகப்படுத்தும்வாறுபோல்
மாடுகாட்டிபென்னைநீ மதிமயக்கமாகுமோ
கோடுகாடுமானையைக் கொன்றரிக்கவல்லவர்
வீடுகாட்டிபென்னைநீ வெளிப்படுத்தல்வேண்டுமே. 21

உருத்தரித்தநாடுதன்னி லோடுகின்றவாயுவைக்
கருத்தினாலிருத்தியே கபாலமேற்றவல்லிரேல்
விருத்தர்களும்பாலராவர் மேனியுஞ்சிவந்திடும்
அருட்டரித்தநாதனாணை யம்மையாணையுண்மையே. 22

என்னகத்திலென்னைநா னெங்குமோடிநாடினேன்
என்னகத்திலென்னையன்றி யேதுமொன்றுகண்டிலேன்
மின்னெழுப்பியின்னகத்தின் மின்னொடுங்குமாறுபோ
லென்னகத்துளீசனோடி யானுமல்லதில்லையே. 23

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிகிலீரோ
நாலுசாமமாகிய நவின்றஞானபோதமாய்
ஆலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சுளே தரித்ததேசிவாயமே. 2

மூச்சதாரசூலமாகி மூன்றதானபேதமா
யுச்சதாரமும்முளே யடங்கவாசியோகமாம்
மெய்ச்சதாரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திரம் ஓம்நமசிவாயமே. 25

மூலமண்டலத்துளே மூச்சதாரமாயமாய்
நாலுவாசலெண்விரலி னடுவுதித்தமந்திரங்
கோலியொன்றுமைந்துமாய் குளிர்ந்தலர்ந்துநின்றநீ
மேலுமேலுநாடிலேன் விழைந்தனன்சிவாயமே. 2

மூன்றுமண்டலத்துளே முட்டிநின்றதூணிலே
நான்றபாம்பின்வாயிலே நடுவுநின்றதீபமா
யீன்றதாயுமப்பனு மெடுத்துரைத்தமந்திரந்
தோன்றுமோரெழுத்திலே சொல்லவெங்குமில்லையே.

ஐம்பதொன்றிலக்கர மடங்கவோரெழுத்திலே
விண்பரந்தமந்திரம் வேதநான்குமொன்றலோ
விண்பரந்தமூலமைந் தெழுத்திலேமுளைத்ததீ
யங்கலிங்கபீடமா யமர்ந்ததேசிவாயமே. 82

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வஞ்சகப்பிறப்பினை மனத்துளே தரித்தநீ
ரஞ்செழுத்தினுண்மையை யறிகிலாதமாந்தரே
வஞ்சகப்பிறப்பினை வதைத்திடவும்வல்லிரே
லஞ்செழுத்தினுண்மையை யறிந்துகொள்ளலாகுமே.

இடங்கள்பண்ணிசுத்திசெய்தே யிட்டபீடத்திலே
யடங்கநீறும்பூசைசெய் தருந்தவங்கள்பண்ணுவீர்
ஒடுங்குகின்றநாதனை ருதித்தஞானமெவ்விட
மடங்குகின்றதெவ்விட மறிந்துபூசைசெய்யுமே. 30

அட்சரமனாதியோ ஆத்துமமனாதியோ
புக்கிருந்துபூதமும் புலன்களுமனாதியோ
தக்கமிக்கநூல்களுஞ் சாஸ்திரமனாதியோ
மிக்கிருந்தஞானிகாள் விரிந்துரைத்தல்வேண்டுமே. 31

அக்கரவனாதியல்ல ஆத்துமமனாதியல்ல
பக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியல்ல
தக்கமிக்கநூல்களுஞ் சரித்திரமனாதியல்ல
லேர்க்கநின்றுடற்கலந்த வண்மைகாணனாதியே 32

புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்
செத்தவிடம்பிறந்தவிடம் வெங்ஙனென்றறிகிலீர்
அத்தனையகத்தினை யறிந்துநோக்கவல்லிரேல்
லுத்தமத்துள்ளாயசோதி யுணரும்யோகமாகுமே. 33

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நாலுவேதமோதுவீர் ஞானமொன்றுசொல்லுவீர்
பாலினுள்ளுநெய்கலந்த பான்மையையறிவிரோ
வாலுமுண்டகண்டனு மகத்துளேயிருக்கையிற்
காலனென்றுசொல்லுவீர் கனவிலுமங்கில்லையே. 34

சாதியாவதேதடா சலந்திரண்டநீரலோ
போதுவாதமொன்றலோ பூதமைந்துமொன்றலோ
ஓதும்வேதகீதமும் மூனுறக்கமொன்றலோ
சாதியாவதென்பதேது சாவுவாழ்வுதிண்ணமே. 35

அருளிலேபிறந்துதித்து மானரூபமாகியே
யிருளிலேதயங்குகின்ற வேழைமாந்தர்கேண்மினோ
பொருளிலேதவம்புனைந்து பொருந்திநோக்கவல்லிரே
மருளதேதுமன்னிமின் மறைந்ததேசிவாயமே. [ன்

கருக்கலந்தகாலமே கண்டிருந்தகாரணா
வுருக்கலந்துபோதலோ வுன்னையானறிந்தனன்
திருக்கலந்தசோதியைத் தெளிந்துயானறிந்தபின்
னிருக்கிலென்னிறக்கிலே னிரண்டுமற்றிருந்ததே. 37

மௌனமானவஞ்செழுத்தை வாசியேறிமெல்லவே
வானெனாநிறைந்தசோதி மண்டலம்புகுந்தபின்
அவனுமவனுமெய்கலந்தே யனுபவிக்குமவ்விலே
யவனுமில்லைநானுமில்லை யாருமில்லையானதே. 38

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கைவிடங்கள்கொண்டுநீர் கண்சிமிட்டிநிற்கிறீர்
செவ்விடங்கள்கொண்டுநீ சொன்றுமேசெப்புகிறீர்.
பொய்யடங்ககண்டவரை பொருந்திநேக்கவல்லீரேல்
மையமர்ந்தகண்டனோடு மருவிவாழலாகுமே. 39

பருத்திநூன்முருக்கியிட்டு பஞ்சையோநவஞ்சர்கள்
கருத்திநூன்முருக்கியிட்டுத் தூண்டியேறவல்லிரேற்
கருத்திநேலையுங்கழன்று காலனேலையமமகன் (யே.
னொருத்திநூலதலைப்படு மிதண்மையுண்மை யுண்மை

தன்மசிந்தையாவளவுந் தவமறியாத்தன்மையாங்க
கன்மசிந்தைவெயிலுழன்று கருத்துமிழ்ந்தகசடரே
ஜென்மஜென்மந்தேடியுந் தெளிவொணுதசெல்வனை
நன்மையாகவும்முளே நயந்துகாணவேண்டுமே. 41

வானிலாததொன்றுமில்லை வானுமில்லையென்றிடில்
ஊனிலாததொன்றுமில்லை யூனுமில்லையுண்ணிடில்
நானிலாததொன்றுமில்லை நானுமில்லைநண்ணிடில்
தானிலாததொன்றுமில்லை தயங்கியாடுகின்றவே. 42

கள்ளமுள்ளவேயிருக்க கடந்தஞானமோதுவீர்
கள்ளமுள்ளறுத்தபோது வெளியிதன்றிக்காண்கிலீர்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ருள்ளமேவிளக்கிநித்த மொளியனாகவல்லிரேற்
றெள்ளுநீரளம்முளே சிறந்ததேசிவாயமே. 43

காணவேண்டுமென்றுநீர் கடன்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ வறிவிலாதமாந்தரே
வேணுமென்றெவ்வீசர்பாத மெய்யுளேதரிப்பரேற்
றாணுவாகின்றசிவன் றான்சிறந்ததாகுமே. 44

அணுவிருடைகண்ட மளவிடாதசோதியைக்
குணமதாகவும்முளே குறித்துநோக்கின்முத்தியாம்
மூணமுடனொன்றுவிரலெண்ணி மூளொணாமயக்கமாய்த்
துணிவிலாதபடியினாற் றொடர்ந்துபூசைசெய்குவீர். 45

எச்சிலெச்சிலென்றுநீ ரிடந்திருக்குமேழைகாள்
துச்சிலெச்சிலல்லவோ தூயகாயமானதும்
வைத்தவெச்சிறேனலோ வண்டினெச்சில்பூவலோ
கைச்சுதாவில்வைத்தகூடலை கறந்தபாலுமெச்சிலே. 46

தீர்த்தலிங்கமூர்த்தியொன்று தேடியோடுந்தீசரே
தீர்த்தலிங்கமுள்ளினின்ற சிவனைத்தெளியுமோ
தீர்த்தலிங்கமும்முளே தெளிந்துகாணவல்லிரேல்
தீர்த்தலிங்கந்தானதாய்ச் சிறந்ததேசிவாயமே. 47

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆடுகொண்டுகூடுசெய் தமர்ந்திருக்கும்வர் முபோத்
தேடுகின்றசெம்பினைத் திடப்படப்பரப்பியே
காடுகின்றதம்பிரானு நம்முளேயிருக்கவே
போடுபத்ரபூசையென்ன பூசையென்னபூசையே. 48

அன்னைகர்ப்பகோளரைக்கு ளக்கினிப்பிரகாசமா
யவ்வரைக்குள்வெந்திடாது வற்பவிந்துரூபமாய்க்
தன்னையொக்குமென்றபோது தடையறுத்துவெளிய
தருதிநல்லபெருமைதந்து தலைவனுவளர்த்தநீ. (தாய்க்

என்னையற்பநேரமு மறக்கிலாதநாதனே
யேகனேயிறைவனே யிராஜராஜராஜனே
யுன்னையற்பநேரமு மொருக்கிருக்கலாகுமே
யுனதுகாட்டமெனதுநாவி லுதவிசெய்வீசனே. 50

எல்லையற்றுநின்றசோதி யேகமாவெறிக்கவே
யெந்தைபூரணப்பிரகாச ரேகபோகமாகிய
நல்லவின்பமௌனசா கரத்திலேயழுத்தியே
நாடொணுதவயிர்தமுண்டு நானழிந்துநின்றனே. 51

அல்லிறந்துபா[illegible]த நீதமுமிறந்துபோ
யண்டாண்டமுங்கடந் தனேகனேகரூபமாய்ச்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சொல்லிறந்து பொருளிறந்த சுகசொரூப வெளியிலே
சொல்லிபூரவெண்ணில் வேறு துணைகளே துமில்லையே.

ஆனவாறு தாயிடு மகண்ட ஞானசோதியை
யூனைநாட்டியும் மூளே யுகந்துகாணவல்லிரே
ஞானகாயமெல்லா மூலகபாரமாளலாம்
வானகாடுமெல்லாம் வண்ணநாரணனையே. 53

இட்டகுண்டமேதடா வெரிதளர்ப்பதேதடா
சுட்டமண்கலத்திலே சுற்றுநூல்களேதடா
முட்டிநின்றதூணிலே முளைத்தெழுந்தசோதியைப்
பற்றிநின்றதேதடா பட்டநாதபட்டரே. 54

நித்தமுமணி துலக்கி நீடுமூலைபுக்கிருந்து
கத்தியேகதறியே கண்கள்மூடியென்னபயன்
எத்தனைபேரெண்ணினு மெட்டிரண்டுபத்தலோ
வத்தனுக்கிதேற்குமோ வறிவிலாதமாந்தரே. 55

பாங்கினோடிருந்துகொண்டு பவனசனத்திருந்துபார்த்தனன்
ஓங்கிநாடிமேலிருந்தங் குச்சரிக்குமந்திரம்
மூங்கில்வெட்டிநாருரித்து மூச்சைமெய்யொடூடுபுண்டுனை
ஏய்ந்தநால்தொன்றுமேயறிந்துணர்ந்துகொண்மினே

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அருக்கனோடுசோமனு மதற்குமப்புறத்திலாம்
நெருக்கியேறுதாரகை நெருங்குமோரத்திலே
பிறப்பிலாதவெளியிலே பரத்தைநாடியூடுபோ
யிருக்கவல்லவர்களே யினிப்பிறப்பதில்லையே. 56

ஆவதும்பரத்துளே யழிவதும்பரத்துளே
போவதும்பரத்துளே புகுவதும்பரத்துளே
மேவரும்பரத்துளே திசைகளும்பரத்துளே
யாவரும்பரத்துளே யியானுமப்பரத்துளே. 58

எட்டிரண்டுகூடியே யிலிங்கமானதேவனை
மட்டதாகவும்முளே மதித்துநோக்கவல்லிரேற்
கட்டமானபிறவியின் கருங்கடல்கடக்கலா
யிட்டமானவெளியினோ டிசைந்திருப்பீர்காண்மினே.

உண்மையானமந்திர மொளியிலேயிருந்திடுந்
தண்மையானமந்திரஞ் சமைந்தரூபமாகியே
வெண்மையானமந்திரம் விளைந்துநீலதாலதே
யுண்மையானமந்திரந் தொன்றுமேசிவாயமே. 60

பன்னிரண்டு[illegible]ருத்திப் பஞ்சவன்னமெ[illegible]
பின்னியவ்வெளிக்குணின்று வேறெடுத்த[illegible]

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சொன்னவிந்து மூலத்திலே சிவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமாவரே. 61

தங்கிவாயி லுச்சிமே லாயிரத்தலங்களாய்
துங்கசுடருமிரண்டு மூண்டெழுந்ததீச்சுடர்
வச்சிரமதாகியே வளர்ந்துநின்றதெவ்விடம்
இச்சுடருமிந்திரியமு மேகமானதெங்ஙனே. 62

எளிதினங்குகாணலாகு மெம்பிரானிருப்பிடம்
அருகிலாதுநின்றதே அகாரமுமுகாரமுங்
குளிகையானசோதியுங் குலாவுகின்றதவ்விடம்
வெளியதாகுமொன்றிலே விளைந்ததேசிவாயமே. 63

ஆதியந்தமூலவிந்து நாதமைந்தெழுத்துமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமைந்துபூதமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமேநின்றதே
ஆதியந்தமூலவிந்து நாமமேசிவாயவே. 64

மூன்றிரண்டுமைந்துமாய் முயன்றெழுந்ததேவராய்
மூன்றிரண்டுமைந்ததா முயங்கிநின்றகாரணம்
மீன்றதாயுமப்பனு மியங்குகின்றநாதமும்
தோன்றுமோரெழுத்திலேறுசொல்லுவேறுமில்லையே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அக்காரந்தவக்கிரத்தி னுட்காரந்தவக்கர
சக்காரந்துசவ்வையுண்டு சம்பளத்திருந்தி
வெட்காரந்தவெண்ணைபோல வெவ்வெறுத்தவெம்பிரா
னுட்கலந்தநின்றநேர்மை யாவர்காணவல்லரே. 66

தொட்டெழுத்தின்வட்டமே நிறைந்தபல்லி யோனியும், நெட்டெழுத்தின் வட்டமொன்றி னின்றதொன்றுங் கண்டிலே, நெட்டெழுத்திரண்டுமே யிலங்குகின்றகாதலால், நெட்டெழுத்தின் வட்டமன்றி நேர்படாத யீசனே. 67

அரியுமாகியயனுமாகி யண்டமெண்டிசையுமாய்
பெரியனாகியுலகினிற் பெயர்ந்தபாதமொன்றலோ
உருவுகண்டுவேழுசெய்து வேடமிட்டமூடரே
யுருவின்மூன்றுதேவர்களு மொன்றதாகுமும்முனே. 68

முத்திசித்திதொந்தமாய் முயங்குகின்றமூர்த்தியை
மற்றுதித்தவைம்பலன்க ளாகுமத்திப்புலன்
அத்தனித்தகாளகண்ட ரன்பினாலலுதின
முச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்துகொண்மினே. 69

சுக்கிலத்துளியுளே சுரோணிதக்கருவுமே
முச்சதுரவாசலின் முளைத்தெழுந்தமேட்டினுன்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திரம் தோன்றுமேசிவாயமே. 70

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வேறுமென்றநானமும் விரும்புகின்ற நாளிலே
தானுண்டென்கிறீர் தரிக்கிறீர்மறக்கிறீர்
தானுமவன்மேலகாடி தன்னுடியும்முளே
காணுமன்றிவேறியாவுங் கண்மயக்கமொக்குமே. 71

வழக்கிலேயுணர்க்கிறீர் மனத்துளே தவிக்கிறீர்
உழக்கலாதநாழியான வாறுபோனவூமைகாள்
உழக்குநாலுநாழியான வாறுபோலுமும்முளே
வழக்கிலேயுரைக்கிறீர் மனதுளீசன்மன்னுமே. 72

உதித்தெழுந்ததெவ்விட மொடுங்குகின்றதெவ்விட
மதித்தஞானமெவ்விட மயங்குகின்றதெவ்விடங்
கதித்தசிவனெவ்விடங் கண்ணுறக்கமெவ்விடம்
விதித்தவல்லஞானிகள் விரித்துரைக்கவேண்டுமே. 73

அண்ணலாரசாதியாய னாதிமுன்னனாதியாய்ப்
பெண்ணுமாணுமொன்றலோ பிறப்பதாகுமுன்னெலாங்
கண்ணிலாணிசுக்கிலக் கருத்தொடுங்கிநின்றபின்
மண்ணுளோரும்விண்ணுளோரும் வந்தவாறதெங்ஙனே

நினைப்பதொன்றுங்கண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்புமாகி நின்றமாயமாய்கையே
யனைத்துமாயகண்டமா யனாதிமுன்னதாகிய
முனைக்குநானெனக்குநீ நினைக்குமாறதெங்ஙனே. 75

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அணுப்பிறந்தகண்டமோ யிழன்றவன்னி யோனியாய்
மணிப்பிறந்துவைத்து னாவினன்மயங்குவீர்
சனிப்பதேதுசாவதேது தாவரத்தினுட்பொரு
நினைப்பதேதுநிற்பதேது நீருணர்ந்துகூறுமே. 76

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரான்
முத்திஞானவித்துளே முளைத்தெழுந்தசுடர்
சத்தனிற்றெளிந்தபேரு தேவர்கோயிற்சேர்ந்தன
னத்தனுடல்கண்டமோ நடங்கியாடலுற்றதே. 77

அங்கலிங்கபீடமும் மகவைமூன்றெழுத்திலுஞ்
சங்குசக்கரத்திலுந் தரித்தவெண்கரத்திலும்
பங்குகொண்டசோதியும் பரந்தவாயுமைந்திலுஞ்
சிங்கநர்தன்னையுஞ் சிவாயவல்லதில்லையே. 78

நீளவீடுகட்டுவீர் நெடுங்கதவுசாத்துவீர்
வாழவேணுமென்றலோ மகிழ்ந்திருந்தமாந்தரே
காலனோலைவந்தபோது கைகலந்துநின்றிடும்
ஆலமுண்டகண்டனை யம்மையாணையுண்மையே. 79

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யினோடுபொய்யுமாய்
மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருந்தமாந்தர்கா
ளோடுபெற்றநும்மவர் கையிலோலைவந்தழைக்கபோ
தாடுபெற்றவில்லையது பெறுதுகாணவவுடலே. 80

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஓடமுள்ளபோதெலா மோடியேயுலாவலாம்
ஓடமுள்ளபோதெலா முறுதிபண்ணிக்கொள்ளலாம்
ஓடமுடைந்தபோ தொப்பிலாதவெளியிலே
யாருமில்லைகேளுமில்லை யாருமில்லையானதே. 81

வல்லவாசலொன்பது மருந்தடைத்தவாசலுஞ்
சொல்லுமவாசலைந்துஞ் சொல்விம்மிநின்றதும்
நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோய்
எல்லைவாசல்கண்டபி னினிப்பிறப்பதில்லையே. 82

ஆதியானதொன்றுமே யனேகரூபமாயமாய்ச்
சாதிபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆதியோடுகூடிமீண் டழிந்துஜென்மமானபின்
சோதியானஞானியாருஞ் சுத்தமாயிருப்பரே. 83

மலர்ந்ததாதுமூலமாகி வையகமலர்ந்ததும்
மலர்ந்தபூவுதிர்ந்தபோது மயக்கம்வந்தடுத்ததுவும்
புலன்கடோறுமப்பொறிகலங்கிப் பூமிமேல்விழுந்ததும்
இலங்கலங்கிநின்றமாய மென்னமாயமீசனே. 84

வண்டுபூமணங்களோடு வந்திருந்ததேனெலாம்
உண்டுளேயடங்குவண்ண மோதுலிங்கமூலமாய்க்
கண்டுகண்டுவேறிலே கருத்தொடுங்கவல்லிரேற்
பண்டுகொண்டவல்வினை பறந்திடுஞ்சிவாயமே. 85

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஓரெழுத்துலிங்கமாக வோதுமக்கரத்துளே
ஓரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்
மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாலெழுத்துநாவுலே நவின்றதேசிவாயமே. 86

தூரதூரதூரமுந் தொடர்ந்தெழுந்ததூரமும்
பாரபாரபாரமென்று பரித்திருந்தபாவிகாள்
நேரநேரநேரமு நினைத்திருக்கவல்லிரேல்
தூரதூரதூரமுந் தொடர்ந்துகூடலாகுமே. 87

குண்டலங்கள்பூண்டுநீர் குளங்கடோறுமூழ்கிநீர்
மண்டுகங்கள்போலநீர் மனத்தின்மாசறுகிலீர்
மண்டலத்தையேந்துக்கையரை மனத்திலேநினைத்தபோது
பண்டைமாலயன்றொழப் பணிந்துவாழலாகுமே. 88

நாடிநாடிநாதனை நயந்துபாருமும்முளே
யோடியோடிமீளுவாரை யும்முளேயடக்கிலீர்
தேடுமேவுகாலனுந் திகைத்துநின்றுபோயிடும்
கோடிகோடிகாலமுங் குறைவிலாதிருப்பரே. 89

செய்யநீடுசெங்கிளநீர் சேர்ந்தகாரணங்கள்போ
லையன்வந்தென்னுள்ளம் புகுந்துகோயில்கொண்டனன்
மெய்யன்வந்துநெஞ்சில்வாழ்கவேண்டியேயிருத்தபின்
வையகத்துமாந்தர்முன்னே வாய்திறப்பதில்லையே. 90

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பூதிபூசையென்னினும் பூசைசெய்யாப்பேதைகாள்
பூதிபூசையென்னிலுநீர் பூசைகொண்டதெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வனாதிபூசைகொண்டதோ
ஏதுபூசைகொண்டதோ வின்னதென்றியம்புவீர் 91

கூடுகட்டிமுட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோ
லாடுமுட்டைக்கண்ணறையின்ற வம்பலத்திலாடுதே
மாடுகொண்டுவெண்ணெயுண்ணு மானிடப்பசுக்களே
வீடுகண்டுகொண்டபின்பு வெட்டவெளியுங்காணுமே.

உடம்புயிரெடுத்ததோ யுயிருடம்பெடுத்ததோ
உடம்புயிரெடுத்தபோ துருவமேதுசெப்பிடம்
உடம்பிறந்துபோய்விடு முயிரிறப்பதில்லையே
உடம்புமெய்ப்பிறந்ததான முண்மைஞானசொல்லடா.

உள்ளதோபிறப்பதோ உயிர்ப்படங்கிநின்றிடும்
மெள்ளவந்துகிட்டநீர் வினவவேண்டுமென்கிறீர்
உள்ளதும்பிறப்பது மொருத்தபோதுநாதமாங்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாதரே. 94

உயிரிருந்ததெவ்விட முடம்பெடுப்பதின்முனே
உயிரதாவதேதடா வுடம்பதாவதேதடா

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதேதடா
உயிரினுடம்பெடுத்த வுண்மைஞானஞ்சொல்லடா.

உயிர்பரத்தினின்றிடு முடம்பெடுப்பதன்முனம்
உயிரகாரமாய்விடு முடம்பகாரமாய்விடும்
உயிரைமுடம்பையு மொன்றுவிப்பதச்சிதம்
உயிரினுடம்பெடுத்த தோர்ந்தவாறுகாண்மினே. 96

இல்லையைக்கடந்துநின்று தெண்டனிட்டுவாயுவி
னெல்லையைக்கடந்துபோ யிமைப்பதுமறிவிரோ
தில்லையைக்கடந்துநின்ற தெய்வலோகவெளியிலே
வெள்ளியுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே. 97

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதல்லவின்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசலாவதொன்றல்ல
மருவுளாசியுற்றதந்த மத்தநாடியுற்றதல்ல
வரியதாகநின்றநேர்மை யாவர்காணவல்லிரே. 98

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றநீர் மறிந்தபோதுசொல்லிரோ
மந்திரங்களும்முளே மதிக்கநீருமும்முளே
மந்திரங்களாவது மனத்திலெந்தெழுந்துமே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதேதடா
உயிரினுடம்பெடுத்த வுண்மைஞானஞ்சொல்லடா.

உயிர்பரத்திநின்றிடு முடம்பெடுப்பதன்முனம்
உயிரகாரமாய்விடு முடம்பகாரமாய்விடும்
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதச்சிதம்
உயிரினுடம்பெடுத்த தோத்தவாறுகாண்மினே. 96

தில்லையைக்கடந்துநின்று தெண்டனிட்டுவாயுவி
னெல்லையைக்கடந்துபோ யிமைப்பதுமறிவிரோ
தில்லையைக்கடந்துநின்ற தெய்வலோகவெளியிலே
வெள்ளியுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே. 97

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதல்லநின்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசலாவதொன்றல்ல
மருவுளாசியுற்றதந்த மத்தநாடியுற்றதல்ல
வரியதாகநின்றநேர்மை யாவர்காணவல்லிரே. 98

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றநீர் மறிந்தபோதுசொல்லிரோ
மந்திரங்களும்முளே மதிக்கநீரும்முளே
மந்திரங்களாவது மனத்திலைந்தெழுத்துமே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலானதும்
மங்கிமாண்டுலகெலா மாண்டுலைந்துபோனதுஞ்
சங்கிரண்டையுந்துறந்து தாரையூதவல்லிரேற்
கொங்கைமங்கைபாகரோடு கூடிவாழலாகுமே. 10

எங்குமுள்ளவீசனா ரெம்முடற்புகுந்தபின்
பங்குகூறுபேசுவார் பாடுசென்றணுகிலா
செங்கையொப்பவழுங்கடெய்வ மென்றுபேதமுள்ளதோ
வுங்கள்பேதமற்றியந்த வுண்மைபேதமில்லையே. 10

சிவவாக்கியம்

முற்றிற்று.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE